**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No.649/2021**

Prosecution witness : 1

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜான்சன் ஜெயக்குமார் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

All accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 16.10.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட கியூபிரிவு குற்றப்புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2020ம் தேதி காலை 6.00 மணிக்கு திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் தெற்கு காவல்நிலைய தொலைபேசியை தொடர்பு கொண்ட போலீஸ்தகவலாளி திண்டுக்கல் ஆர்.வி.நகர் ரோடு,முத்தழகு பட்டி, ஒற்றைப்பனைமரம் மலையடிவாரம் அருகே TN 57 AM8676என்ற சிவப்பு நிற யமகா எபிசெட் பைக்கில் இரண்டு நபர்கள் இருந்துகொண்டு கஞ்சா வியாபாரம் செய்து வருகின்றனர். உடனடியாக வந்தால் பிடித்துவிடலாம் என தகவல் கூறினார். நான் உயர் அதிகாரிகளுக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்துவிட்டு காவல் நிலையத்தில் என்னுடன் ஆஜரில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர்-இளங்கோவன், தலைமைக்காவலர்கள்-1177-திரு.அந்தோணி,1448-மணிகண்டன் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன், தேவையான உபகரணங்களுடன் தகவலாளி சொன்ன மேற்படி இடத்திற்கு சென்று மறைந்து இருந்து பார்த்தபோது TN 57 AM 8676என்ற சிவப்பு நிற யமகா எபிசெட் பைக்கில் இரண்டு நபர்கள் கையில் பிளாஸ்டிக் கவருடன் நின்றுகொண்டிருந்தார்கள். 6.20 மணிக்கு நானும் என்னுடன்

இருந்த போலீஸ் பார்ட்டிகளும் மறைவான இடத்திலிருந்து வெளிவந்தபோது மேற்படி இரண்டு நபர்கள் தப்பித்து செல்ல எத்தனித்தனர். போலீஸ்பார்ட்டி உதவியுடன் மேற்கண்ட இரண்டு நபர்களை பிடித்தபோது மேற்கண்ட இரண்டு நபர்களும் தங்களது பெயரான கார்த்திகுமார் என்ற ஜிம்கார்த்திக், வயது 23/2020, த/பெ.செந்தில்குமார் என்ற நொண்டி செந்தில், 13 ஆர்.வி.நகர், திண்டுக்கல். 2.குணசீலன், 20/2020, 136, ஆர்.வி.நகர், திண்டுக்கல் என தங்களது பெயரை சொன்னார்கள். பின்னர் நான் தாங்கள் இருவரும் அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சாவிற்பனை செய்துகொண்டிருக்கிறீர்கள் என ரகசிய தகவல் கிடைத்துள்ளது. எனவே, தாங்கள் இருவரையும் சோதனை செய்யவேண்டும். தாங்கள் இருவரையும் சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமோ அழைத்து சென்று சோதனையிட உரிமை உள்ளது என எடுத்து கூறினேன். ஆனால் அவர்கள் எங்களுக்கு நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய விருப்பமில்லை நீங்களே எங்களை சோதனை செய்து கொள்ளலாம் என கூறினார்கள். மேற்படி இரண்டு நபர்களுக்கும் 6.45 மணிக்கு சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டு அதில் நான் கையொப்பமிட்டேன். அந்த கடிதத்தின் கீழே இரண்டு நபர்களும் கையொப்பம் இட்டார்கள். பின்னர் அவர்கள் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பாலிதீன் கவரில் இருந்த உலர்ந்த கஞ்சாவை எடுத்து ஆஜர் செய்தார்கள். பின்னர் அவர்களை அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சாவை வைத்திருந்த காரணத்திற்காக காரணம் கூறி 7.00 மணிக்கு அவர்களை போலீஸ்பார்ட்டிகள் முன்னிலையில் கைது செய்தேன். பின்னர் 7.15 மணிக்கு கார்த்திக்குமார் என்கிற ஜிம்கார்த்தியை எந்தவித ஆசை வார்த்தையோ அல்லது மிரட்டாமலோ அவராக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பொதுமக்கள் யாரும் இல்லாத காரணத்தால் என்னுடன் இருந்த தலைமைக்காலர்கள் 1177-அந்தோணி மற்றும் 1448-மணிகண்டன் ஆகியோர் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து

அதில் நான் கையொப்பமிட்டேன் கீழே எதிரி மற்றும் சாட்சி இருவரும் கையொப்பமிட்டனர். ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்கண்ட கஞ்சா எப்படி கிடைத்தது என்று கேட்டபோது திண்டுக்கல் மாவட்டம் சோலைஹால் என்.எஸ்.கே நகரைசேர்ந்த சுந்தரம் பிள்ளை என்பவரின் மகன் வேளாங்கண்ணி என்பவரிடம் இருந்து நாங்கள் இருவரும் சேர்ந்து கிலோ ரூ.10,000/- வீதம் 13கிலோ கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வாங்கி வந்து வீட்டில் வைத்துவிட்டு அதிலிருந்து சிறிதளவு கஞ்சாவை எடுத்துக்கொண்டு எனது இருசக்கரவாகனத்தில் இந்த இடத்திற்கு வந்து கஞ்சாவை விற்பனை செய்துகொண்டிருந்தேன். நீங்கள் என்னை அழைத்து சென்றால் எனது வீட்டில் உள்ள 12கிலோ கஞ்சாவை எடுத்து ஆஜர் செய்கிறேன். தற்போது நாங்கள் வைத்துள்ள உலர்ந்த கஞ்சாவையும் TN 57 AM 8676 என்ற சிவப்புநிற யமகா எபிசெட் பைக்கையும் ஆஜர் செய்கிறோம் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்னர் 8.45 மணிக்கு அதே இடத்தில் வைத்து பொதுமக்கள் யாரும் இல்லாத காரணத்தால் என்னுடன் வந்த போலீஸ்பார்ட்டிகளான அந்தோணி மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்பு 600கிராம் உலர்ந்த கஞ்சாவை 50 கிராம் மற்றும் 50கிராமை மாதிரிக்காக எடுத்துக்கொண்டு 500 கிராம் கஞ்சா மற்றும் TN 57 AM 8676 என்ற சிவப்புநிற யமகா எபிசெட் பைக்கையும் போலீஸ்பட்டன் சீல் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதில் மேற்கண்ட சாட்சிகளும் எதிரியும்,நானும் கையொப்பம் இட்டோம். பின்னர் அங்கிருந்து எதிரி அழைத்து சென்று (கார்த்திக் என்ற ஜிம்கார்த்திக்) அவரது வீட்டில் வெள்ளைசாக்கில் வைத்திருந்த 12கிலோ கஞ்சாவையும் அதை எடைபோட உபயோகப்படுத்திய எக்ஸ்டீம் என்ற எலக்ட்ரானிக் தராசையும் இரண்டுக்கு மூன்று என்ற ஜிப்பேக்கவர் 50கிராமையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த 12கிலோ கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக 100கிராம் மற்றும் 100 கிராமாக இரண்டு காக்கி பொட்டலங்களில் பிரித்து எடுத்து அதில் அரக்கு வைத்து போலீஸ்பட்டன் சீல் வைத்தேன். மேற்கண்ட பொருட்கள்

அனைத்தையும் 9.15 மணிக்கு பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக இல்லாத காரணத்தால் என்னுடன் இருந்த போலீஸ்பார்ட்டிகளாகிய அந்தோணி மற்றும் மணிகண்டன் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சியில் இரண்டு சாட்சிகள், எதிரி மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். பின்னர் அங்கிருந்து போலீஸ் பார்ட்டி மற்றும் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்து ஆகியவற்றுடன் காலை 10.00 மணிக்கு திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையம் வந்து தனி அறிக்கையின் படி காவல் ஆய்வாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன். இதில் ஒப்புதல் வாக்குமூலம், சோதனை நமூனா, கைது குறிப்பு ஆகியவற்றை முதல் நிலை காவலர் -237-பிரபு என்பவரை வைத்து எனதுமடிக்கணினியில் பதிவு செய்து எடுத்துக்கொண்டேன். பின்னர் பிரிவு -57ன் படி உயர் அதிகாரிகளுக்கு விரிவான அறிக்கையை சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.1 ஆகும். கைது நமூனா அ.சா.ஆ.2 ஆகும். என்முன்னால் 1ம் எதிரியால் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகும். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவிற்கான அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகும். 1வது எதிரியின் வீட்டில் இருந்து கஞ்சாவை கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆகும். பிரிவு -57ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.